# CULTURAL TOURISM ITS RESOURCES: A STUDY BASED ON JAFFNA PENINSULA

N. SARANYA, V.THUVARAGAN & B.VAISHNAVAN

Department of Geography, University of Jaffna

Saranyasaru124@gmail.com

thuvak2@gmail.com

vaishnavankanna@gmail.com

**ஆய்வச்சுருக்கம்**

உலக பொருளாதாரத்தில் சுற்றுலாவானது மிகவும் விரைவாக வளர்ச்சியடைந்து வரும் கைத்தொழிலாகக் காணப்படுகின்றது. சுற்றுலா அபிவிருத்தி பல வகைகளில் இருப்பினும் பல்வேறு துறைகள், நடவடிக்கை மூலமாக பிராந்திய அபிவிருத்தியை மேம்படுத்திக் கொள்ள முடியும். அந்தவகையில் யாழ்குடாநாடானது கலாச்சார சுற்றலாவிற்கான அதிகளவு வளவாய்ப்புக்களைக் கொண்டுள்ளதுடன் மரபுரீதியாக இவ் ஆய்வுப்பிரதேசமானது கலாச்சார சுற்றுலாவிற்கு பிரசித்தமானதாகக் காணப்படுகின்றதுடன் பொருளாதாரத்தை ஈட்டிக்கொடுக்கும் துறையாகவும் உள்ளது. இச்சுற்றுலாவானது உள்நாட்டு யுத்தத்தின் பின்னராக அபிவிருத்தியடைந்து வருவதோடு யாழ்குடாநாடும் அபிவிருத்தி நிலைக்குச் சென்றுள்ளது. இவ்வாய்வானது யாழ்குடாநாட்டின் கலாச்சார சுற்றுலாவிற்கான வாய்ப்பு எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டது. இதனடிப்படையில் யாழ்குடாநாட்டின் கலாச்சார சுற்றுலாத் தளங்களை அடையாளப்படுத்தி இச்சுற்றுலாவிற்கான வளவாய்ப்புக்களை அறிவதன் ஊடாக நிலைத்துநிற்கும் கலாச்சார சுற்றுலாவிற்கான பரிந்துரைகளை முன்வைத்தல் இவ்வாய்வின் நோக்கமாகும்.இவ்வாய்விற்காக முதலாம்நிலைத்தரவு, இரண்டாம்நிலைத்தரவு அடிப்படையாகக் கொள்ளப்பட்டு ஆய்வின் நோக்கங்கள் அடிப்படையில் SWOT பகுப்பாய்வின் ஊடாக விபரணரீதியாக முடிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் GIS தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கலாச்சார சுற்றுலா மேற்கொள்ளப்படும் இடங்களும், கலாச்சார சுற்றுலாவிற்கு பொருத்தமான இடங்களும் அடையாளம் காணப்பட்டது.ஆய்வுப்பிரதேசத்தின் கலாச்சார சுற்றுலாவிற்கான வளவாய்ப்புக்கள் எவ்வாறு காணப்படுகின்றது என்றும் இதில் சுற்றுலாவிற்கான பலம், வாய்ப்பு 80% மான முறையிலும் காணப்படுவதுடன் சுற்றுலாவினை பாதிக்கும் பலவீனம், அச்சுறுத்தல் விடயங்களினை சாதகமாக மாற்றிக் கொள்ள முடிவதுடன் புதிய கலாச்சார சுற்றுலாத் தளங்களாக வல்லிபுர ஆழ்வார் ஆலயம், இணுவில் கந்தசுவாமி கோவில், மருதனார்மட ஆஞ்சநேயர் ஆலயம், பொன்னாலை =வரதராஜர் ஆலயம் போன்ற பல ஆலயங்கள் அடையாளம் செய்யப்பட்டதுடன் சுற்றுலாப்பயணிகளை கவர்ந்திழுக்கக் கூடிய வகையிலான முறையில் நிலைத்துநிற்கக் கூடிய அபிவிருத்திகளும் அதற்கான பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டது.

**KEYWORDS** - கலாச்சார சுற்றுலா, யாழ்ப்பாணகுடாநாடு, சுற்றுலாத்தளங்கள், வளவாய்ப்புக்கள், பிராந்திய அபிவிருத்தி, நிலைத்துநிற்கும் அபிவிருத்தி

## அறிமுகம்

சுற்றுலாத்துறையானது வளர்ச்சியடைந்த நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான உள்ளார்ந்த ஆற்றலை கொண்டிருக்கும் ஒரு துறையாகக் காணப்படுகின்றது. இத்துறை அந்நியச்செலாவணியை சம்பாதிப்பதன் மூலமும் வேலைவாய்ப்பினை உருவாக்குவதன் மூலமும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பினை வழங்கி வருகின்றது. சுற்றுலாவானது விவசாயம், மீன்பிடி, கட்டடம், கலாசாரம் மற்றும் ஏனைய துறைசார்ந்த ரீதியில் அதன் அபிவிருத்தி காணப்படுகின்றது. சுற்றுலாத்துறையின் வளர்ச்சியினை இன்று இலங்கையிலும் உணர முடிகின்றது.

சுற்றுலாவானது ஆய்வு, வணிக மற்றும் பிற நோக்கங்களுக்காக தொடர்ச்சியாக ஒரு வருடத்திற்கு மேல் தங்கள் வழக்கமான சூழலுக்கு வெளியே உள்ள இடங்களுக்கு சென்று தங்கியிருக்கும் நபர்களின் செயற்பாடுகளை உள்ளடக்கியதாகும் (UNWTO, 2010). மக்கள் தமது சாதாரண வேலையிடங்களிலிரும் வேறு இடங்களுக்கு தற்காலிகமாக நகர்ந்து செல்வதாகும்(மத்தீசன், வோல்,1982). மேலும் சுற்றுலாவானது எல்லா செயற்பாடுகளின் தொகுப்பாகும். அதாவது சேவைகள், கைத்தொழில்கள், பிரயாணம், அனுபவமுடன் இணைந்த போக்குவரத்து, தேவைகள், நிறுவப்பட்ட முறையிலான உணவு, குடிபானம், சில்லறைக்கடைகள், பொழுதுபோக்கான வர்த்தகம் மற்றும் ஏனைய உபசரிப்பு முறைகளினை தனிப்பட்டவருக்கு அல்லது குழுக்களுக்கு வழங்கும் ஒருமுறையே சுற்றுலாவாகும்.

அந்தவகையில் சுற்றுலா வகையில் கலாச்சார சுற்றுலாவும் ஒன்றாகவும். கலாச்சார சுற்றுலாவானது ஒவ்வொரு பிராந்தியத்தின் தனித்துவமான கலை, கலாச்சாரம், உணவு, உடை, பழக்கவழக்கம் மற்றும் மரபுரிமைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளும் நோக்கில் மேற்கொள்ளப்படும் சுற்றுலாவாகும். இலங்கையின் சுற்றுலாவினை பொறுத்தவரையில் பொருளாதாரத்தில் முக்கியமாக பங்கு வகிக்கும் துறையில் ஒன்றாகக் காணப்படுகின்ற போதிலும் யுத்தகாலப்பகுதிகளினை அடுத்து இத்துறையின் வளர்ச்சி அபரீதமடைந்துள்ளது. அந்தவகையில் 2018 ஆம் ஆண்டில் 2.33 மில்லியன் சுற்றுலாப்பயணிகள் வருகை தந்துள்ளதோடு 2019 ஆம் ஆண்டின் ஆவணி மாதம் வரையில் 1.26 மில்லியன் பயணிகள் வருகை தந்துள்ளார்கள். இது பிராந்திய ரீதியான அபிவிருத்திக்கு ஓர் திறவுகோலாகக் காணப்படுகின்றது. இதற்கேற்ப இலங்கையின் புவியியல் ரீதியான இடவமைவும் அதன் இயற்கையழகும் சர்வதேச ரீதியில் சுற்றுலாப்பயணிகளை இலங்கைக்கு கவர்ந்திழுப்பதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. அந்த வகையில் இலங்கையின் ஒருபருவ வறட்சியும் ஒருபருவ குளிர் காலநிலையும் சாதகமாக அமைந்துள்ளதுடன் குளிர்காலப்பகுதியில் அதிகளவு சுற்றுலாப்பயணிகள் வருகை தருகின்றனர்(Mathivathani&Sasiharan,2010).

அந்தவகையில் இலங்கையின் 25 மாவட்டங்களில் வடமாகாணம் யுத்தகாலத்தின் பின்னர் தனித்துவமான முறையில் பல்நோக்குடைய சுற்றுலாத்துறையில் வளர்ச்சியடைந்து வருகின்றது. இதில் யாழ்ப்பாண மாவட்டமானது பல்துறையில் வளர்ச்சியடைந்து வருகின்ற நிலையில் கலாச்சார சுற்றுலாவிற்கான வளவாய்ப்பினை கொண்டுள்ளது. யாழ்குடாநாடானது கலாச்சார பண்பாட்டில் முக்கியமான ஒரு பிராந்தியமாக காணப்படுகின்றது. இங்கு வாழும் மக்கள் தமது மொழி, சமயம், கலை, கலாச்சாரம், பண்பாடு, என்பவற்றில் அதிக அக்கறை கொண்டவர்கள். இப்பிராந்தியத்தில் கலாச்சார சுற்றுலாவினை மேம்படுத்தக் கூடிய வகையில் அடையாளப்படுத்தப்பட்ட தளங்களாக நல்லூர் கந்தசுவாமிகோவில், தொண்டமனாறு செல்வச்சந்நிதி கோவில், நைனைநாகபூசணி அம்மன் ஆலயம், நாகவிகாரை, கீரிமலைநகுலேஸ்வரம் போன்றவற்றை குறிப்பிட்டுக்கொள்ளலாம். மேலும் இவ் கலாச்சார பாரம்பரிய தளங்கள் எதிர்கால தலைமுறையினருக்கும் வரலாற்று கலாச்சார யதார்த்தம் மற்றும் சமூகத்தின் கலாச்சார தொடர்ச்சியை படிப்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் உதவுவதாகும்(Pushparatnam,2014).

அந்தவகையில் கலாச்சார சுற்றுலா என்பது பார்வையாளரின் அத்தியாவசிய உந்துதல், ஒரு சுற்றுலாத்தளத்தில் உள்ள உறுதியான மற்றும் தெளிவான கலாச்சார ஈர்ப்புக்கள்/ தயாரிப்புக்களை கற்றுக் கொள்வது கண்டிப்பது அனுபவிப்பது மற்றும் உட்கொள்வதாகும். மேலும் ஈர்ப்புக்கள், தயாரிப்புக்கள், கலை, மற்றும் கட்டடக்கலை, வரலாற்று மற்றும் கலாச்சார பாரம்பரியம், சமையல் பாரம்பரியம், இலக்கியம், இசை, படைப்புத்தொழில்கள் மற்றும் வாழ்க்கை முறைகள், மதிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு சமூகத்தின் தனித்துவமான பொருள், அறிவுசார், ஆன்மீக மற்றும் உணர்ச்சி அம்சங்களுடன் தொடர்புடைய அமைப்புக்கள், நம்பிக்கைகள் மற்றும் மரபுகளாகும்(UNWTO, 2017).


இக்கலாச்சார சுற்றுலாவின் ஊடாக பிரயாண ஒன்றிணைவும், பிராந்தியத்தின் கலாச்சாரம், தனித்துவமான வாழ்க்கை முறைமை கொண்ட மக்கள் மற்றும் அவர்களின் புவியியல் ரீதியான பிரதேசங்கள், வரலாற்று ரீதியான மக்கள், கலைகள், கட்டட வடிவமைப்பு, சமயம் மற்றும் ஏனைய மூலக்கூறுகள் போன்றவற்றை இணைத்த ஒரு வாழ்க்கை முறையாகவும் காணப்படுகின்றது. இருப்பினும் யாழ்ப்பாணம் கலாச்சார பாரம்பரியத்துடன் நிறைந்திருந்தாலும் இந்த தளங்களில் நடாத்தப்படும் ஆய்வுகள் மிகக் குறைவானதாகும்(Mathivathani&Sasiharan,2010). அந்தவகையில் கலாச்சார சுற்றுலாவினை மேம்படுத்திக்கொள்வதற்கு குறித்த பிராந்தியங்களில் கலாச்சார மற்றும் மரபுரிமையான கவர்ச்சியான பகுதிகள் மிகவும் முக்கியமானதாகும் (Josep et al.,1998).

கலாச்சார சுற்றுலாத்துறையின் நீடித்த தன்மைக்காக நாடுகள் தங்கள் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்க வேண்டும். கலாச்சார பாரம்பரியம் ஒரு நாட்டின் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார நலவாழ்விற்கு பங்களிக்கின்றது. எனவே எந்தவொரு நாட்டிற்கும் ஒரு பயனுள்ள நிலையான அபிவிருத்தித்திட்டம் முக்கியமானதாகும். குறிப்பாக ஒருவரின் கலாச்சார பாரம்பரியத்தை திட்டமிடத்தவறினால் நாட்டின் செழிப்பை இழக்க நேரிடும்(Norhasimah,et al.,2014). அருங்காட்சியங்கள் மற்றும் காட்சியகங்கள் கலாசார பாரம்பரிய பண்புக்கூறுகள் ஒரு பிராந்தியத்தின் வருமானத்தை ஆதரிக்கின்றன. மேலும் அவை ஏனைய சுற்றுலாத்துறையுடன் போட்டியிட வேண்டியதாக உள்ளது(Brent. Et al., 1993).

இவ்வாய்வின் ஊடாக யாழ்குடாநாட்டின் கலாச்சார சுற்றுலாவின் விருத்தியை அதிகரிப்பதுடன் கலாச்சார சுற்றுலா காணப்படும் பகுதிகளையும் அடையாளப்படுத்துவதன் ஊடாக அதற்கான வளவாய்ப்புக்களை அறிந்து கொண்டு அதற்கு பொருத்தமான திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் நீண்ட கால நிலைத்துநிற்க கூடிய வகையிலான கலாச்சார சுற்றுலாத்தளமாக யாழ்குடாநாட்டினை ஸ்திரப்படுத்திக்கொண்டு பிராந்திய ரீதியான அபிவிருத்தியையும் ஏற்படுத்திக் கொள்ள முடியும். யாழ்குடாநாட்டின் கலாச்சார சுற்றுலாத்தளங்களை அடையாளப்படுத்துவதுடன் யாழ்குடாநாட்டின் கலாச்சார சுற்றுலாவிற்கான புதிய பொருத்தமான தளங்களை அடையாளம் காண்பதுடன் இச்சுற்றுலாவினை மேம்படுத்திக் கொள்வதற்கான வளவாய்யுக்களை அறிந்து குடாநாட்டின் நிலைத்துநிற்கும் கலாச்சார சுற்றுலாவினை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல் இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுப்பிரதேசம்**


ஆய்வுப்பிரதேசமான உரு 1 வடமாகாணத்தின் ஒரு மாவட்டமாக இவ் யாழ்ப்பாண மாவட்டம் காணப்படுகின்றது. இதன் பரப்பளவு 1025 சதுரகிலோமீற்றராகும். இங்கு வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் என நான்கு பிரிவாக நிர்வாகம் காணப்படுகின்றது. 15 பிரதேச செயலகப்பிரிவும் 435 கிராமசேவகர் பிரிவும் காணப்படுகின்றது. 2018 இவ் மாவட்டத்தின் சனத்தொகை 613,000 ஆக காணப்படுகின்றது. இங்கு கலாச்சார சுற்றுலாவினை அபிவிருத்தி செய்யக்கூடிய வகையில் வளவாய்ப்புக்கள் காணப்படுவதுடன் சுற்றுலாப்பயணிகளை கவர்ந்திழுக்கக் கூடிய வகையில் சிறந்த புவியியல் இடவமைவினையும் காலநிலைத்தன்மையையும் கொண்டுள்ளது.




***உரு1- ஆய்வுப்பிரதேசம்***

**முறையியல்**

இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டு ஆய்விற்குட்படுத்தப்பட்டது. பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளானது கட்டமைப்பின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டது.





*உரு 2 யாழ்குடாநாட்டின் கலாச்சார சுற்றுலாவிற்கான வளவாய்ப்புக்களை அறிவதற்கான பாய்ச்சல் வரைபடம்*

**முடிவுகள்**

**1.1** யாழ் குடாநாட்டின் கலாச்சார சுற்றுலாத்தளங்களை அடையாளப்படுத்தி படமாக்குதல்.


ஆய்வுப்பிரதேசமான யாழ்குடாநாட்டுப்பகுதியின் சுற்றுலாப்பயணிகள் விரும்பிச் செல்லும் கலாச்சார சுற்றுலா தளங்களானது யாழ்குடாநாட்டு படம் மூலமாக GIS தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி அடையாளம் காணப்பட்டது. இதனை உரு 3 காட்டுகின்றது. இத்தளங்களானது இலங்கையின் சுற்றுலா அகராதி மூலமாக அடையாளப்படுத்தப்பட்டது. இதனூடாக சுற்றுலாப்பயணிகள் தமது சுற்றுலாத்தளங்களை இலகுவாக அறிந்து கொள்ள முடிவதுடன் இப் பகுதிகளுக்கு இலகுவாக தமது பயணித்தினை மேற்கொள்ள உதவுவதாக அமைந்துள்ளது.




*உரு 3- யாழ்குடாநாட்டின் அடையாளப்படுத்தப்பட்ட கலாச்சார சுற்றுலாத்தளங்கள்*

**1.2** யாழ் குடாநாட்டின் கலாச்சார சுற்றுலாவிற்கு பொருத்தமான தளங்களை அடையாளம் காணல்.

ஆய்வுப்பிரதேசமான யாழ்குடாநாட்டுப்பகுதியின் கலாச்சார சுற்றுலாவிற்கு பொருத்தமான சுற்றுலாத் தளங்களானது GIS தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி அடையாளம் செய்யப்பட்டது. இதனை உரு 4 காட்டுகின்றது. இப்பகுதிகளுக்கு அதிகளவு சுற்றுலாப்பயணிகளின் வருகை காணப்படுகின்றது. இப் பகுதிகள் இலகுவாக சுற்றுலாப்பயணிகளை கவர்ந்திழுக்கக் கூடியதாக காணப்படுவதுடன் பயணத்தினை மேற்கொள்வதற்கு உதவுவதாகவும் அமைந்துள்ளது. இவ்வாறான புதிய சுற்றுலாத்தளங்களானது அதன் வளவாய்ப்பு மற்றும் அவற்றின் கலாச்சார ரீதியான முக்கியத்துவத்தின் அடிப்படையிலும் சுற்றுலாத்தளங்களாக அடையாளப்படுத்தக் கூடிய பகுதிகளாகக் காணப்படுகின்றது. இத்தளங்களை அபிவிருத்தி செய்வதற்காக உள்ளூர் அதிகாரசபை உள்ளூர் வளங்களினை பயன்படுத்தி நிலைத்திருக்கும் திட்டமிடல் செயற்பாடுகளை மேற்கொண்டு அப்பிரதேசத்தின் அபிவிருத்தியை மேம்படுத்திக் கொள்ள முடியும்.




*உரு 4 - யாழ் குடாநாட்டின் கலாச்சார சுற்றுலாவிற்கு பொருத்தமான தளங்களை அடையாளம்*

கலாச்சார சுற்றுலாவினை மேம்படுத்திக் கொள்வதற்கான வளவாய்யுக்களை அறிந்து கொள்ளுதல்.

இரண்டாம்நிலைத் தரவுகளின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஆய்வுப்பிரதேசத்தின் கலாச்சார சுற்றுலாவிற்கான சாத்தியத்தன்மை எவ்வாறு காணப்படுகின்றது என்பது SWOT பகுப்பாய்வின் அடிப்படையில் அறிந்து கொள்ளப்பட்டது. இதனை அட்டவணை 1 இன் ஊடாக அறிந்து கொள்ளலாம். இத்தரவின் ஊடாக உள்ளூர் வளங்களை சரியான முறையில் பயன்படுத்தி அப்பிரதேசத்தின் கலாச்சார சுற்றுலாவினை நிலைத்துநிற்கும் தன்மையின் அடிப்படையில் மேற்கொள்வதற்கும் ஆய்வுப்பிரதேசத்தின் அபிவிருத்தியை மேம்படுத்திக் கொள்ளவும் உதவுகின்றது.

***அட்டவணை1- யாழ்குடாநாட்டின் கலாச்சார சுற்றுலாவிற்கான வளவாய்ப்புக்கள்***

| பலம் | பலவீனம் |
|---|---|
| • காலநிலை | • வளமுகாமைத்துமின்மை |
| • இடவமைவு | • முரண்பாடுகள் |
| • கலாச்சார இடங்கள் | • திட்டமிடல்முறை, சரியான வழிகாட்டல் இன்மை |
| • போக்குவரத்து வசதிகள் | • பருவகாலமாற்றத் தன்மை |
| • குறைந்தளவிலான இயற்கை அனர்த்த செயற்பாடுகள் | • ஒரு பருவகால சமய நிகழ்வுகள் |
| • உள்ளூர் அதிகாரசபையின் ஆதரவு | • உட்கட்டமைப்பு வசதியின் திருப்தியின்மை |
| • உறவுநிலை (மக்கள் - சுற்றுலாப்பயணிகள்) | • மக்கள் மத்தியில் விழிப்புணர்வின்மை |
| • வளங்கள் | • சுற்றுலாத்தளங்களை |
| • அர்ப்பணிப்புடைய மக்கள் | |
| • கல்வியறிவுடைய மக்கள் | |
| **அச்சுறுத்தல்** | **வாய்ப்புக்கள்** |

| | |
|---|---|
| • உள்நாட்டு குழப்பங்கள் | • மூலதனம் |
| • அரசியல் தலையீடுகள் | • வேலைவாய்ப்புக்கள் |
| • உயர்பாதுகாப்பு பகுதிகளாக இருத்தல் | • தொழிலாளர்கள் |
| • இராணுவ சோதனை | • பிராந்திய அபிவிருத்தி |
| • பிராந்தியம் பற்றிய தவறான அபிப்பிராயம் | • மொழி, கலாச்சார பயன்பாடு |
| • சட்டவிரோத நடவடிக்கைகள் | |

நிலைத்துநிற்கும் கலாச்சார சுற்றுலாவினை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல்.

யாழ்ப்பாண குடாநாடு மரபுரீதியாக கலாச்சார பாரம்பரியத்திற்குரிய பகுதியாகக் காணப்படுகின்றது. இங்கு கலாச்சார சுற்றுலாவிற்கு பெரும் சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றது. பல சுற்றுலாப்பயணிகள் முதல் இடங்கள், சுற்றுலா வழிகாட்டிகள், சேவையின் தரம் மற்றும் ஆய்வு மற்றும் தளங்களைப் பாதுகாத்தல், காலநிலை, வானிலை அறிகுறிகள், சேதங்கள் மற்றும் இலக்குகள் குறித்த தகவல்கள் போன்றன சரியான முறையில் காணப்படாமையால் பல சிக்கல்களுக்கு முகம்கொடுப்பதுடன் குறைந்த அளவிலான திருப்தியை கொண்டுள்ளார்கள். இதனால் பொருத்தமான முறையில் திட்டங்களை உருவாக்கி மேற்கொள்ளுதல் வேண்டும்.

அத்துடன் குறைந்தளவிலான விருத்தியடையாத, நிலைத்திருப்புத்தன்மை இல்லாத, பாதுகாப்பு இல்லாத பாரம்பரிய சுற்றுலா தளங்களை சுற்றுலாப்பயணிகள் பார்வையிட விரும்பாத தன்மை காணப்படுகின்றதுடன் இவ்வாறான இடங்களை ஏனைய சுற்றுலாப்பயணிகளுக்கும் பரிந்துரைக்க மாட்டார்கள். இவ்வாறான தளங்களை சேதமடையாமல் அல்லது அழிக்காமல் பாதுகாத்தல் மூலமாக சுற்றுப்பயணிகளை கவர்ந்திழுத்துக் கொள்ள முடியும். இதனால் பாதுகாப்பான முறையில் சுற்றுலா வழிகாட்டிகளை உருவாக்கி சரியான வீதிவலைப்பின்னல் வரைபடங்களையும் வழங்குவதன் மூலமாக இப்பிரச்சனையை தீர்த்துக்கொள்ள முடியும். மற்றும் இன, மத பேதமின்றிய தன்மையினை மக்கள் மத்தியில் உருவாக்கிக் கொள்ளுதல் சிறப்பான முறையாகும்.

உள்ளூர் வளங்கள் அனைத்தும் உள்ளூர் அதிகாரசபையின் கீழ் கண்காணிக்கப்படுவதால் அவ் வளங்களினை சரியான முறையில் திட்டமிட்டு பயன்படுத்திக் கொள்வதன் ஊடாக பிராந்திய அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும். மேலும் போக்குவரத்து வசதிகள், சுத்தமான தன்மை, மனதை கவரக்கூடிய கட்டடங்கள், சூழல் கவர்ச்சித்தன்மையை அதிகரித்தல், மக்களுக்கிடையிலான இடைத்தொடர்பினை சிறப்பாக பேணுதல் போன்றவற்றின் ஊடாக அப்பகுதியை உயர்வடையச்செய்தல். மேலும் சுற்றுலாக்கல்வி மற்றும் பயிற்சிகளை அப்பகுதிகளில் முக்கியப்படுத்துவதன் ஊடாக வெற்றிகரமான, நிலைத்திருக்கும் சுற்றுலாவினை மேற்கொள்ளலாம்.யாழ்ப்பாண கலாச்சார சுற்றுலாவிற்கான வளவாய்ப்புக்கள் இருப்பினும் சரியான திட்டமிடல் செயற்பாடுகள் மேற்கொள்வதில் குழப்பங்கள் காணப்படுகின்ற போதிலும் நிலைத்துநிற்கும் ரீதியில் அபிவிருத்தியை மேற்கொண்டு அதனுடாக பொருளாதார நிலையினை உயர்த்திக்கொள்ள முடியும். அதுமட்டுமின்றி ஆய்வுப்பிரதேசத்தின் நிலையான கலாச்சா சுற்றுலாவினை அபிவிருத்தி செய்வதற்கும் திட்டங்களை அமுல்படுத்துவதற்கும், ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் சிறந்த சுற்றுலா அபிவிருத்தியாளர்கள், ஆய்வாளர்களை உருவாக்குதல் அவசியமானதாகும்.

**முடிவுரை**

ஆய்வுப்பிரதேசத்தின் சுற்றுலாவினைப் பொறுத்தவரையில் கலாச்சார சுற்றுலாவிற்கான வளவாய்பப்புக்கள் காணப்படுகின்றது. அந்தவகையில் இச்சுற்றுலாத்துறையானது ஆய்வுப்பிரதேசத்தின் பொருளாதாரத்தையும், பிராந்திய அபிவிருத்தியையும் மேறற்கொள்வதற்கான ஒரு துறையாகக் காணப்படுகின்றது. யாழ்குடாநாட்டின் கலாச்சார சுற்றுலாவிற்காக தெரிவுசெய்யப்பட்ட இடங்களும், மேலும் இச்சுற்றுலாவிற்கு பொருத்தமான பல இடங்களும் GIS தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அடையாளம் காணப்பட்டது. அவையாவன வல்லிபுர ஆழ்வார் ஆலயம், இணுவில் கந்தசுவாமி கோவில், நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயம் போன்றனவாகும். அத்துடன் நேர்காணல், கலந்துரையாடல், வினாக்கொத்து மூலமாக ஆய்வுப்பிரதேசத்தில் கலாச்சார சுற்றுலாவிற்கான வளவாய்ப்புக்களை அறிந்து கொள்ளும் வகையில் ஶுறுமுவு பகுப்பாய்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் ஆய்வுப்பிரதேசத்தின் கலாச்சார சுற்றுலாவிற்கான பலம், பலவீனம், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல் போன்ற பல விடங்கள் அறிந்து கொள்ளப்பட்டது. அந்தவகையில் இவ்வாறான விடயங்களில் பலம், வாய்ப்புக்கள் போன்றவற்றினை மேலும் பயனுள்ள முறையில் அபிவிருத்தி செய்வதுடன் பலவீனம், அச்சுறுத்தல் விடயங்களை இச்சுற்றுலாவிற்கு சாதகமான முறையில் மாற்றிக்கொள்ளக் கூடிய வகையிலும் நீண்டகால நிலைத்துநிற்கும் கலாச்சார சுற்றுலாவிற்கான திட்டங்களை ஆய்வுப்பிதேசத்தில் முன்வைப்பதுடன் அதற்கான பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டது். இதனூடாக யாழ்குடாநாட்டின் கலாச்சார சுற்றுலாவினை மேம்படுத்த முடியும்.

Brent, R. Hawkins, D. E., Go, F. Frechtling, D. (1993). World travel tourism review. CAB international, Wallingford.
Josep, T.O., Leary,A., Lastair,M., Morrison, Aurkene Aluzua.(1998).Tourism identifying nichesfor international travellers.
Mandawala, P. B. (2012). Heritage management In Jaffna: A value based approach'. In: Pushparatnam, P. Life Style of Jaffna 2012.
Mathivathani, V. Sasitharan, P. (2013). Potential for regional development of tourism industry- post war at Jaffna district in Sri Lanka: Proceeding of The Third International Symposium (pp.6-7). SEUSL Oluvil, Sri Lanka.
Mohammad, A. (2014). Sustainable heritage tourism: A tourist-oriented approach for managing Petra archaeological park, Jordan: (Ph.D.thesis) The Graduate School of Clemson University.
Norhasimah, I. Tarmiji, M. Azizul, A. (2014). Cultural heritage tourism in Malaysia: Issues and Challenges: SHS Web of Conferences.

Pushparatnam, P. (2014). Tourism and monuments of archaeological heritage In northern Sri Lanka, kalaikesary, Express Newspaper (Ceylon) (Pvt) Ltd
Timothy, D. Boyd, S. W. (2006). Tourism heritage tourism in the 21st Century: valued traditions and new perspectives. Journal of Heritage Tourism, 1(1), 1–16.
UNWTO, 2010.